ஓட்டெடுப்புக்கு முன்பே எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

# நாடாளுமன்றத்தில் மத்திய அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி

## 3வது முறையாக ஆட்சி அமைப்போம்: மோடி உறுதி

புதுடெல்லி, ஆக.11

நாடாளுமன்றத்தில் மத்திய அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் படுதோல்வி அடைந்தது. ஓட்டெடுப்புக்கு முன்பே எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தனர். 3வது முறையாக நாங்கள் ஆட்சிக்கு வருவோம் என்று பிரதமர் மோடி உறுதிப்பட கூறினார்.

மணிப்பூர் விவகாரத்தில் மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கூட்டணி சார்பில் மக்களவை காங்கிரஸ் துணைத்தலைவர் கவுரவ் கோகாய், நம்பிக்கையில்லா தீர்மான நோட்டீஸ் கொடுத்தார்.

கடந்த 8ந்தேதி, மக்களவையில் நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான விவாதம் தொடங்கியது. பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் பேசினர்.

நேற்று முன்தினம் 2வது நாள் விவாதத்தில், காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி பேசினார். அப்போது, மணிப்பூரில் பாரத மாதாவை கொன்று விட்டதாக அவர் குற்றம் சாட்டினார். அதே நாளில், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் பேசினார்.

இந்நிலையில், நேற்று 3வது நாளாக விவாதம் நடந்தது. மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பங்கேற்று பேசினார். அப்போது அவரின் பேச்சை கண்டித்து காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், தி.மு.க. எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்து, பின்னர் அவைக்கு திரும்பினர்.

நம்பிக்கை இல்லா தீர்மானம் மீதான விவாதத்தின்போது மக்களவை காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி பிற்பகல் 2.48 மணிக்கு பேசத் தொடங்கினார். மக்களவையின் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது பிரதமர் அவையில் இருப்பது மரபு. இதன்படி பிரதமர் மோடி அவைக்கு வந்தார்.

ஆதிர் ரஞ்சன் சவுத்ரியின் சில கருத்துகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்க சபாநாயகர் ஓம் பிர்லா உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்தனர். சிறிது நேரத்தில் அவர்கள் மீண்டும் அவைக்கு திரும்பினர்.

மாலை 5 மணியளவில், நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பிரதமர் மோடி பதில் அளித்து பேசினார்.

### மத்திய அரசு மீது மக்கள் நம்பிக்கை

அவர் பேசியதாவது:–

மத்திய அரசு மீது மக்கள் முழு நம்பிக்கை வைத்துள்ளனர். அவர்கள் தங்கள் நம்பிக்கையை தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றனர். இதற்காக மக்களுக்கு நன்றி. மக்களவையில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லா தீர்மானம் என்பது எங்களுக்கான சோதனை அல்ல. இது எதிர்க்கட்சிகளுக்கான சோதனை.

கடந்த 1999, 2003, 2018 ஆகிய ஆண்டுகளில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது, அப்போது எதிர்க்கட்சி தலைவர்களாக இருந்த சரத்பவார், சோனியாகாந்தி, மல்லிகார்ஜுன கார்கே ஆகியோர்தான் முதலில் பேசினர்.

ஆனால், இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தின்போது, மக்களவை காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரிக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. அமித்ஷா சொன்ன பிறகுதான் அவர் பேச முடிந்தது. அவர் ஏன் ஒதுக்கப்பட்டார் என்று தெரியவில்லை. ஒருவேளை, கொல்கத்தாவில் இருந்து வந்த தொலைபேசி அழைப்புதான் காரணமா?

நாட்டின் வளர்ச்சி சார்ந்த மசோதாக்கள் மீது விவாதம் நடக்கும்போது, எதிர்க்கட்சிகள் அதை நடத்த அனுமதிப்பது இல்லை. அவர்களுக்கு தேசத்தை விட கட்சிதான் முக்கியம்.

### நம்பிக்கையில்லா தீர்மானம் மங்களகரமாக அமையும்

கடந்த 2018ம் ஆண்டு இதேபோல் எங்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தனர். அதுஎங்களுக்கு மங்களகரமாக அமைந்தது. 2019ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் அதைவிட பெரிய வெற்றி பெற்றோம்.

அதுபோல், இப்போது கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா தீர்மானமும் எங்களுக்கு மங்களகரமாக அமையும். அடுத்த ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில், முன்பை விட அமோக வெற்றி பெறுவோம். 3வது முறையாக நாங்கள் ஆட்சி அமைப்போம். இதற்கு முந்தைய அனைத்து தேர்தல் வெற்றி சாதனைகளையும் நாங்கள் முறியடிப்போம்.

நாட்டு மக்கள் நலன் மீது எதிர்க்கட்சிகளுக்கு அக்கறை இல்லை. சொந்த கட்சிகள் மீது மட்டுமே அக்கறை செலுத்துகின்றன. மக்களவை தேர்தலுக்காக பல்வேறு ஊழல் கட்சிகள் ஓரணியில் சேர்ந்துள்ளன.

மத்திய அரசுக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டதை நல்ல சகுனமாக கருதுகிறோம். எங்களுக்கான போட்டி மைதானத்தை எதிர்க்கட்சிகளே தயார் செய்து கொடுத்துள்ளன. இந்த ஆட்டத்தில் ஆளும் கட்சி வரிசையில் இருந்து சதங்கள் (‘செஞ்சுரி’) குவிக்கப்பட்டு வருகின்றன. சிக்சர்கள் பறக்கிறது. எதிர்க்கட்சி வரிசையில் ஒரு பந்தைக்கூட வீச முடியவில்லை.2028ம் ஆண்டில் நீங்கள் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரும்போது, பொருளாதாரத்தில் உலகின் 3வது இடத்தை இந்தியா பெற்றிருக்கும் என்பது மக்களின் நம்பிக்கை.

நாடாளுமன்றத்தில் கடந்த சில நாட்களில் ஜன் விஸ்வாஸ் மசோதா, மருத்துவ மசோதா, பல் மருத்துவ ஆணைய மசோதா உள்ளிட்ட பல்வேறு மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளன. ஆனால் அவை நடவடிக்கைகளில் எதிர்க்கட்சிகளுக்கு நம்பிக்கை இல்லை. அனைத்தையும் அரசியலாக்குவதை மட்டுமே எதிர்க்கட்சிகள் நோக்கமாக கொண்டு செயல்படுகின்றன.

### தீவிரவாதிகளை நம்பும் காங்கிரஸ்

காங்கிரஸ் கட்சியை பொறுத்தவரை, பயங்கரவாத தாக்குதல் விஷயத்தில் பாகிஸ்தான் சொல்வதை நம்பும். நமது ராணுவம் சொல்வதை நம்பாது. காஷ்மீரில் உள்ள சாமானியர்கள் மீது நம்பிக்கை வைக்காது. ஆனால், தீவிரவாதிகள் மற்றும் பாகிஸ்தான் கொடி பிடிப்பவர்கள் மீது நம்பிக்கை வைக்கும்.

வெளிநாட்டு மண்ணில் இருந்து இந்தியாவைபற்றி எந்தஎதிர்மறையான விஷயம் வந்தாலும், அதை காங்கிரஸ் பிடித்துக் கொள்கிறது. நாட்டில் புதிய நம்பிக்கை, ஆற்றல், உறுதிப்பாடு வந்தபோதிலும், அதை காணாமல் நெருப்புக்கோழி மனநிலையில் காங்கிரஸ் இருக்கிறது.

கொரோனா பெருந்தொற்றின்போது இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகளை மக்களுக்கு செலுத்தினோம். அப்போதும் கொரோனா தடுப்பூசி குறித்து காங்கிரஸ் சந்தேகம் எழுப்பியது.

### காங்கிரஸ் வேண்டாம்

காங்கிரஸ் கட்சி மீது இந்திய மக்களுக்கு நம்பிக்கை இல்லை. மேற்கு வங்காளத்தில் கடைசியாக 1972ம் ஆண்டு காங்கிரஸ் வெற்றி பெற்றது. அதன்பிறகு, ‘காங்கிரஸ் வேண்டாம்’ என்று அம்மக்கள் கூறிவிட்டனர்.

உத்தரபிரதேசம், பீகார், குஜராத் ஆகிய மாநிலங்களில் கடைசியாக 1985ம் ஆண்டு வெற்றி பெற்றது. அதன்பிறகு அம்மாநில மக்கள், ‘காங்கிரஸ் வேண்டாம்’ என்று கூறிவிட்டனர்.

காங்கிரஸ் கட்சி ஆணவம் நிறைந்தது. தேசிய கொடியில் இருந்து மூவர்ணத்தை எடுத்துக் கொண்டது. ‘காந்தி’ என்ற பெயரையும் திருடிக்கொண்டது.

காங்கிரஸ் கட்சி யாரையாவது எதிர்த்தால், அவர்கள் செழித்து வளர்வார்கள். அப்படி ஒரு ரகசிய வரம் வாங்கி வந்துள்ளது. அதற்கு நானே உதாரணம். என்னை 20 ஆண்டுகளாக காங்கிரஸ் வசை பாடி வருகிறது. ‘‘மோடி, உங்களுக்கு கல்லறை தோண்டப்படுகிறது’’ என்பதுதான் அக்கட்சிக்கு பிடித்த கோஷம். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.

இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ், எல்.ஐ.சி., வங்கிகள் ஆகியவற்றை காங்கிரஸ் குறிவைத்தது. ஆனால், அவை மூன்றும் நல்ல வருவாய் ஈட்டி சாதனை படைத்துள்ளன.

தற்போது, நாட்டுக்கு சாபமிடுகிறார்கள். அதனால், நாடு இன்னும் வலிமை அடையும். அதன்மூலம், மத்திய அரசும் மேலும் வலிமை அடையும். இந்தியா, உலக அளவில் புதிய உயரத்தை அடையும். இந்தியா மீதான உலகத்தின் நம்பிக்கை அதிகரித்துள்ளது.

இந்தியா, மிக முக்கியமான காலகட்டத்தில் சென்று கொண்டிருக்கிறது. அதன் தாக்கத்தை இன்னும் 1,000 ஆண்டுகளுக்கு உணரலாம். அடுத்த 1,000 ஆண்டுகளுக்கு தேவையான வலிமையான அடித்தளத்தை தங்கள் கடின உழைப்பால் மக்கள் அமைத்துள்ளனர்.

இந்திய பொருளாதாரம், தானாக வளரும் என்று காங்கிரஸ் தலைவர்கள் கூறுகிறார்கள். அவர்களுக்கு எந்த புரிதலும் இல்லை. ‘நிதிஆயோக்’ அறிக்கைப்படி, கடந்த 5 ஆண்டுகளில் 13 கோடியே 50 லட்சம் பேர், வறுமையில் இருந்து விடுபட்டுள்ளனர்.

எதிர்க்கட்சிகளுக்கு என் மீது மிகவும் பாசம். அது எந்த அளவுக்கு என்றால், நான் நாடாளுமன்றத்தில் பேசும்போது, தண்ணீர் குடித்தால் கூட அதை பிரச்சினை ஆக்குவார்கள். 24 மணி நேரமும் மோடியை பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கூட்டணியின் பெயரை மாற்றினால், ஆட்சிக்கு வந்து விடலாம் என்று எதிர்க்கட்சிகள் நினைக்கின்றன. ‘இந்தியா’ என்று புதிய பெயர் வைத்து விட்டனர். அதன்மூலம், ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கு கடந்த ஜூலை மாதம் பெங்களூருவில் இறுதிச்சடங்கு செய்து விட்டனர்.

இவ்வாறு அவர் பேசினார்.

### தீர்மானம் படுதோல்வி

மணிப்பூர் விவகாரம் குறித்து பிரதமர் பேசவில்லை என்று குற்றம்சாட்டி இந்தியா கூட்டணியை சேர்ந்த எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்தனர். அவர்கள் வெளிநடப்பு செய்த பிறகு, மணிப்பூர் விவகாரம் குறித்து பிரதமர் பேசினார்.

அப்போது பேட்டி அளித்த எதிர்க்கட்சி தலைவர்கள், பிரதமர் தனது உரையில் 90 நிமிடங்கள் வரை மணிப்பூர் குறித்து பேசாததை கண்டித்து வெளிநடப்பு செய்ததாக தெரிவித்தனர். பிரதமர் சபையில் பேசும்போதும் எதிர்க்கட்சியினர் மணிப்பூர், மணிப்பூர் என்று குரல் எழுப்பினர்.

எதிர்க்கட்சிகளின் வெளிநடப்பை குறிப்பிட்ட மோடி, ‘‘கேள்வி எழுப்பியவர்களுக்கு பதில் கேட்பதற்கு தைரியம் இல்லை. சுட்டு விட்டு தப்பி ஓடுகிறார்கள்’’ என்று கூறினார்.

பிரதமர் மோடியின் பதிலுரைக்கு பிறகு, நம்பிக்கையில்லா தீர்மானம் மீது குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அனைவரும் எதிர்த்து குரல் கொடுத்தனர். எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்து விட்டதால், ஆதரவு குரல் எழவில்லை.

அதனால், மத்திய அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி அடைந்தது.

விதிமுறைகளுக்கு முரணாக நடந்ததாக மக்களவை காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரியை சஸ்பெண்ட் செய்ய வகை செய்யும் தீர்மானத்தை அமைச்சர் பிரகலாத் ஜோஷி கொண்டு வந்தார். இது குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது.

பெண்களுக்கு எதிரான குற்றம் மன்னிக்க முடியாதது

# மணிப்பூரில் அமைதியை நிலைநாட்ட மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை: மோடி உறுதி

புதுடெல்லி, ஆக.11

மணிப்பூரில் அமைதியை நிலைநாட்ட மத்திய, மாநில அரசுகள் கூட்டாக நடவடிக்கை எடுத்து வருவதாக மக்களவையில் பிரதமர் மோடி கூறினார்.

மக்களவையில், 3 நாட்களாக நடந்த நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான விவாதத்துக்கு பிரதமர் மோடி நேற்று 2¼ மணி நேரம் பதில் அளித்தார்.

அப்போது அவர் பேசியதாவது:

வடகிழக்கு பகுதி, எங்கள் இதயத்தின் ஒரு அங்கம். வடகிழக்கின் உணர்வுகளை புரிந்துகொள்ள காங்கிரஸ் கட்சி ஒருபோதும் முயற்சி செய்யவில்லை.

அங்கு 50 தடவைக்கு மேல் நான் சென்றுள்ளேன். மத்திய மந்திரிகள் 400 தடவைக்கு மேல் சென்றுள்ளனர். இது வெறும் தரவு மட்டும் அல்ல, வடகிழக்கு மீதான அர்ப்பணிப்பு உணர்வு.

மணிப்பூரில் நிலவும் நிலையற்ற சூழ்நிலைக்கு முந்தைய காங்கிரஸ் அரசே காரணம். அங்கு வன்முறை குறைந்து வருகிறது. பெண்களுக்கு எதிரான கடுமையான குற்றங்கள் நடந்துள்ளன. அவை மன்னிக்க முடியாதவை. குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை கிடைப்பதை உறுதி செய்ய மத்திய, மாநில அரசுகள் முயற்சி மேற்கொண்டுள்ளன.

மணிப்பூரில் விரைவில் அமைதி நிலைநாட்டப்படும், புதிய நம்பிக்கையுடன் மணிப்பூர் பயணிக்கும் என்று உறுதி அளிக்கிறேன். அதற்கு மத்திய, மாநில அரசுகள் கூட்டாக நடவடிக்கை எடுத்து வருகின்றன. நாடு உங்களுக்கு துணைநிற்கும் என்று மணிப்பூர்



பெண்களுக்கு உறுதி அளிக்கிறேன்.

மணிப்பூரில் பாரத மாதாவை கொலை செய்து விட்டதாக இங்கு பேசப்பட்டுள்ளது. பாரத மாதாவின் மரணத்தை பார்க்க வேண்டும் என்று இவர்கள் ஏன் விரும்புகிறார்கள்? இத்தகைய கருத்துகள், ஒவ்வொரு இந்தியனின் உணர்வுகளையும் காயப்படுத்தும்.

வடகிழக்கு மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் காங்கிரசே காரணம். அதற்கு வடகிழக்கு மக்கள் பொறுப்பல்ல. அது காங்கிரசின் அரசியல்.

நம்பிக்கையில்லா தீர்மானம் மீது தயார் ஆவதற்கு எதிர்க்கட்சிகளுக்கு போதிய நேரம் இருந்தது. ஆனால் அவர்கள் தயாராகவில்லை. அவர்களின் அனுதாபிகளுக்கும் ஏமாற்றம்தான். எதிர்க்கட்சிகளின் கூட்டணி, ஒரு ஆணவ கூட்டணி. அங்கு ஒவ்வொருவருக்கும் பிரதமர் பதவி மீது கண். ஏழைகளின் பசி மீது அக்கறை இல்லை. அதிகார பசி மீதுதான் ஆர்வம். சந்தர்ப்பம் வரும்போது, கத்திகள் வெளியே வரும்.

மேற்கு வங்காளத்தில், திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்டு கட்சிக்கு எதிராக காங்கிரஸ் செயல்படுகிறது. ஆனால் டெல்லியில் சேர்ந்து கொள்கிறது.

கடந்த 2 நாட்களுக்குமுன்பு காங்கிரஸ் கட்சியின் கூட்டணி கட்சியான தி.மு.க.வின் அமைச்சர் ஒருவர், இந்தியா என்பது வடஇந்தியா என்று கூறுகிறார். தமிழ்நாடு இந்தியாவில் இல்லை என்று கூறுவதா?. தமிழ்நாடு இந்தியாவின் ஒரு பகுதி தானே.

ராஜாஜி, காமராஜர், எம்.ஜி.ஆர்., அப்துல்கலாம் பிறந்த மண்ணை இந்தியாவில் இருந்து பிரிக்க பார்க்கிறார்கள். இதற்கு எதிர்க்கட்சியினர் என்ன பதில் சொல்ல போகிறார்கள்?.

தமிழகத்தை ஆளும் தி.மு.க. அரசு கச்சத்தீவை மீட்க வேண்டும் என்று எனக்கு தொடர்ந்து கடிதம் எழுதிக்கொண்டு இருக்கிறது. கச்சத்தீவு தமிழ்நாட்டுக்கும், இலங்கைக்கும் இடையேவுள்ள தீவு. சிலர் அதை மற்றொரு நாட்டுக்கு (இலங்கைக்கு) கொடுத்துவிட்டனர். இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது இந்த சம்பவம் நடந்தது. அது பாரதத்தாயின் ஒரு பகுதி இல்லையா?.

1962ம் ஆண்டுக்கு பின்னர் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியால் வெற்றி பெற முடியவில்லை.

இவ்வாறு மோடி பேசினார்.

விருதுநகர் பா.ஜனதா அலுவலகத்தில் பாரத மாதா சிலை அகற்றப்பட்டதை குறிப்பிட்ட பிரதமர், தமிழகத்தில் பாரத மாதாவுக்கு அவமரியாதை செய்கிறார்கள் என்று தெரிவித்தார்.

# ரூ.735 கோடியில் எழும்பூர் ரெயில் நிலைய மேம்பாட்டு பணி: 3 ஆண்டுகளில் முடிவடையும்

சென்னை, ஆக.11

எழும்பூர் ரெயில் நிலைய மேம்பாட்டு பணிகள் திட்டமிட்டபடி முடிவடையும் என ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

அம்ரித் பாரத் ரெயில் நிலைய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் ரெயில் நிலையங்களை மேம்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன்படி நாடு முழுவதும் ஆயிரத்து 309 ரெயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட உள்ளது. இதில், தமிழ்நாட்டில் 62 ரெயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட உள்ளது. ஏற்கனவே, சென்னை எழும்பூர், காட்பாடி, மதுரை, ராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய 5 ரெயில் நிலையங்கள் முழு வீச்சில் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இதில், 144 ஆண்டுகள் பழமை வாய்ந்த சென்னை எழும்பூர் ரெயில் நிலைய கட்டிடம் மேம்படுத்தும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இந்த ரெயில் நிலையம் ரூ.734 கோடியே 91 லட்சம் மதிப்பில் மேம்படுத்தும் பணிகள் நடந்து வருகிறது. குறிப்பாக, எழும்பூர் ரெயில் நிலைய கட்டிடம் பழமை மாறாமல் மேம்படுத்த திட்டமிடப்பட்டு அதற்கு ஏற்றார்போல் புதுப்பிக்கும் பணிகள் நடந்து வருகிறது.

இந்த ரெயில் நிலையத்தை சராசரியாக நாள்தோறும் 30 ஆயிரம் பேர் வரையில் பயன்படுத்தி வருகின்றனர். முக்கியத்துவம் வாய்ந்த இந்த ரெயில் நிலையத்தின் மேம்பாட்டு பணிகளை 2026ம் ஆண்டுக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து, தெற்கு ரெயில்வே அதிகாரிகள் கூறியதாவது:

மேம்படுத்தப்பட்டு வரும் எழும்பூர் ரெயில் நிலையம், விமான நிலையத்தை போன்று பயணிகள் வருகை, புறப்பாடு ஆகியவை தனித்தனியாக பிரிக்கப்பட உள்ளது. பயணிகள் காத்திருப்பு அறை பிரத்யேகமாக அமைக்கப்பட உள்ளது. பார்சல்களை கையாள தனிப்பகுதி, நடை மேம்பாலங்கள், வாகன காப்பகங்கள் ஆகியவை அமைய உள்ளது. பயணிகள் காத்திருப்பு பகுதியிலிருந்து நடைமேடைகளுக்கு மின்தூக்கி மற்றும் எஸ்கலேட்டர் மூலம் செல்லலாம்.

பொது மற்றும் தனியார் வாகனங்களில் வரும் பயணிகள் தங்கு தடையின்றி ரெயில் நிலையத்துக்கு சென்று வரும் வகையில் வெளிப்புறப் பகுதி அமைய உள்ளது. போக்குவரத்து தேவைகளுக்கு ஏற்ப வருங்காலத்தை கருத்தில்கொண்டு கட்டுமானம் அமையும். முதியோர், பெண்கள், மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைத்து பயணிகளும் பயன்படுத்தும் வகையில் கழிவறைகளும், இருக்கைகளும், மின்தூக்கிகளும் நிறுவப்படும். பயணிகள் தனித்தனியாக வந்து சேர 3 நடை மேம்பாலங்கள் அமைய உள்ளது. மேம்பாட்டு பணிகள் திட்டமிட்டபடி 2026ம் ஆண்டுக்குள் முடிக்க திட்டமிட்டுள்ளோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.


## யூகால் லிமிடெட்

( Formely known as UCAL Fuel Systems Limited)

11 B/2 (S.P), முதல் குறுக்கு சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை - 600 058

Tel.No: 044-6654 4719, E-mail: ufsl.ho@ucal.com, Website: www.ucalfuel.com, CIN: L31900TN1985PLC012343

**30 ஜுன் 2023 உடன் முடிந்த காலாண்டு தணிக்கை செய்யப்படாத தனிநிலை மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை**

தனிநிலை (ரூ. லட்சத்தில்)

| வ எண் | விவரங்கள் | 30.06.2023 வரை முடிந்த 3 மாதங்கள் | 31.03.2023 வரை முடிந்த 3 மாதங்கள் | 30.06.2022 வரை முடிந்த 3 மாதங்கள் | 31.03.2023 வரை முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|
| | | தணிக்கை செய்யப்படாத | தணிக்கை செய்யப்பட்ட | தணிக்கை செய்யப்படாத | தணிக்கை செய்யப்பட்ட |
| 1. | செயல்பாடுகளிலிருந்து வருமானம் (மொத்த) | 12,488.56 | 11,820.25 | 14,340.00 | 58,704.46 |
| 2. | நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு முந்தையது). | 99.72 | (535.22) | 599.18 | 1,290.53 |
| 3. | வரிக்கு முந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம்/ (நஷ்டம்) (வரி, விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது). | 99.72 | (535.22) | 599.18 | 1,290.53 |
| 4. | வரிக்கு பிந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம்/ (நஷ்டம்) (வரி, விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது). | 64.64 | (373.38) | 372.36 | 859.01 |
| 5. | நடப்பு காலத்திற்கான மொத்தம் விரிவான வருவாய் (நடப்பு காலத்திற்கான லாபம்/ (நஷ்டம்) (வரிக்கு பிந்தையது) மற்றும் இதர விரிவான வருவாய் (வரிக்கு பிந்தையது). | 64.64 | (316.54) | 372.36 | 915.85 |
| 6. | சமபங்கு மூலதனம் | 2,211.36 | 2,211.36 | 2,211.36 | 2,211.36 |
| 7. | பங்கு ஒன்றின் வருவாய் (தலா ரூ.10/–) (தொடரும் மற்றும் தொடர்ச்சியில்லாத செயல்பாடுகளுக்கானது) (வருடாந்திரப்படுத்தப்படாதது). | | | | |
| | அ. அடிப்படை | 0.29 | (1.69) | 1.68 | 3.88 |
| | ஆ. எளிதாக்கப்பட்ட | 0.29 | (1.69) | 1.68 | 3.88 |

ஒருங்கிணைக்கப்பட்ட (ரூ. லட்சத்தில்)

| வ எண் | விவரங்கள் | 30.06.2023 வரை முடிந்த 3 மாதங்கள் | 31.03.2023 வரை முடிந்த 3 மாதங்கள் | 30.06.2022 வரை முடிந்த 3 மாதங்கள் | 31.03.2023 வரை முடிந்த ஆண்டு |
|---|---|---|---|---|---|
| | | தணிக்கை செய்யப்படாத | தணிக்கை செய்யப்பட்ட | தணிக்கை செய்யப்படாத | தணிக்கை செய்யப்பட்ட |
| 1. | செயல்பாடுகளிலிருந்து வருமானம் (மொத்த) | 18,667.87 | 18,835.89 | 19,458.89 | 83,208.72 |
| 2. | நடப்பு காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு முந்தையது). | (441.82) | (784.85) | 241.48 | 643.11 |
| 3. | வரிக்கு முந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம்/ (நஷ்டம்) (வரி, விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது). | (441.82) | (784.85) | 241.48 | 643.11 |
| 4. | வரிக்கு பிந்தைய நடப்பு காலத்திற்கான நிகர லாபம்/ (நஷ்டம்) (வரி, விலக்கு பெற்ற ரகங்கள் மற்றும் / அல்லது சிறப்பு ரகங்களுக்கு பிந்தையது). | (484.89) | (658.51) | (23.03) | 85.25 |
| 5. | நடப்பு காலத்திற்கான மொத்தம் விரிவான வருவாய் (நடப்பு காலத்திற்கான லாபம்/ (நஷ்டம்) (வரிக்கு பிந்தையது) மற்றும் இதர விரிவான வருவாய் (வரிக்கு பிந்தையது). | (265.73) | (1,125.67) | 430.87 | 623.36 |
| 6. | சமபங்கு மூலதனம் | 2,211.36 | 2,211.36 | 2,211.36 | 2,211.36 |
| 7. | பங்கு ஒன்றின் வருவாய் (தலா ரூ.10/–) (தொடரும் மற்றும் தொடர்ச்சியில்லாத செயல்பாடுகளுக்கானது) (வருடாந்திரப்படுத்தப்படாதது). | | | | |
| | அ. அடிப்படை | (2.19) | (2.98) | (0.10) | 0.39 |
| | ஆ. எளிதாக்கப்பட்ட | (2.19) | (2.98) | (0.10) | 0.39 |

**குறிப்புகள்:**

மேற்கூறியவை SEBI 2015 ஆணைப்படி கட்டுப்பாடு 33-ன் கீழ் (பட்டியல் மற்றும் பிற வெளிப்படுத்தல்கள்) பங்கு சந்தையில் தாக்கல் செய்யப்பட்ட தணிக்கை செய்யப்படாத 30.06.2023 உடன் முடிந்த காலாண்டு நிதிநிலை முடிவுகளின் பகுதி ஆகும். தணிக்கை செய்யப்படாத 30.06.2023 உடன் முடிந்த காலாண்டு நிதிநிலை முடிவுகளின் முழு விபரம் பங்கு வர்த்தக இணையதளம் (www.bseindia.com & www.nseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளத்தில் (www.ucalfuel.com) உள்ளன.

யூகால் லிமிடெட்

இடம்: சென்னை
தேதி: 10.08.2023

ஜெயகர் கிருஷ்ணமூர்த்தி
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்



## ஈசாப் இந்தியா லிமிடெட்

ESAB ®

CIN:L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம் : பிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.

தொ.பேசி எண். 044-4228 1100, இ-மெயில்: investor.relations@esab.co.in

**ஜூன் 30, 2023 இல் முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் அறிக்கையின் சுருக்கம்**

ரூ. லட்சங்களில் (EPS தவிர)

| வ.எண் | விவரங்கள் | முடிவடைந்த காலாண்டு ஜூன் 30, 2023 | முடிவடைந்த காலாண்டு மார்ச் 31, 2023 | முடிவடைந்த காலாண்டு ஜூன் 30, 2022 | முடிவடைந்த ஆண்டு மார்ச் 31, 2023 |
|---|---|---|---|---|---|
| | | தணிக்கையாகாதது | தணிக்கையானது | தணிக்கையாகாதது | தணிக்கையானது |
| 1 | மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம் | 30,077 | 30,469 | 24,497 | 1,09,860 |
| 2 | இக்காலத்திற்கான நிகர லாபம் (வரிக்கு முன், சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்) | 5,688 | 5,645 | 3,434 | 18,229 |
| 3 | இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின் ) | 5,688 | 5,645 | 3,434 | 18,229 |
| 4 | இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின் ) | 4,238 | 4,186 | 2,560 | 13,568 |
| 5 | இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)] | 4,238 | 4,230 | 2,560 | 13,612 |
| 6 | சமபங்கு மூலதனம் | 1,539 | 1,539 | 1,539 | 1,539 |
| 7 | பங்கு விகித ஈட்டுத்தொகை (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்) | | | | |
| | அ) அடிப்படை | 27.54 | 27.20 | 16.63 | 88.16 |
| | ஆ) குறைமதிப்பு | 27.54 | 27.20 | 16.63 | 88.16 |

**குறிப்பு:** மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015 வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஜூன் 30, 2023 இல் முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் விரிவான அறிக்கையின் சுருக்கம். இதன் முழுவடிவமும் நிறுவனத்தின் இணையதளமான www.esabindia.com மற்றும் பங்குச் சந்தைகள் - பிஎஸ்இ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட் ஆகியவற்றின் இணையதளத்தில் கிடைக்கும்.

ஈசாப் இந்தியா லிமிடெட்டுக்காக

சென்னை
ஆகஸ்ட் 10,2023

“Shaping the world we imagine”
Visit our website : http://www.esabindia.com

ரோஹித் கம்பீர்
மேலாண்மை இயக்குனர்



**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் தாம்பரம்**
**ந.கா.எண். 2801/2023/இ**

B. தனபால், த/பெ.பாலன் (லேட்) நெ.292, தந்தை பெரியார் தெரு, புலிப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம் மனுதாரர்

மனுதாரர் தனது தாய் B. தங்கம், க/பெ. பாலன் (லேட்) கதவு எண்.3/95A, அகரம் மெயின் ரோடு, திருவஞ்சேரி கிராமம், தாம்பரம் வட்டம்–17 என்ற விலாசத்தில் 14.05.2016 அன்று இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய் தவறியதால் தற்போது மேற்படி இறப்பு பதிவுச் செய்ய எதிர்மனுதாரருக்கு உத்தரவிடக்கோரி தாக்கல் செய்துள்ள மனுவின் பேரில் யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் 15 நாட்களுக்கு மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தெரிவிக்க வேண்டியது என்று அறிவிக்கப்படுகிறது.

**B. தனபால்**
மனுதாரர்